[4th November 1966

திரு. வை. சங்கரன் : மதுரை-இராமநாதபுரம் சேம்பர் ஆப் காமர்ஸ், புட் அடல்ட்ரேஷன் ஆக்ட் சம்பந்தமாகக் குறிப்பிட்டு இன்னென்ன திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்று அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார்களா? இப்பொழுது அரசாங்கம் ஒரு திருத்தம் சம்பந்தமாகச் சொன்னார்கள். பாக்கியுள்ள திருத்தங்கள் சம்பந்தமாக ஏதாவது இந்த அரசாங்கம் சிபார்சு அனுப்பி வைத்திருக்கிறார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த ஆக்ட் அடிப்படையில் எல்லா உணவுப் பண்டங்களின் அடல்ட்ரேஷனும் வருகிறது. ஆகையால் அதுதான் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

Employment opportunities

*381 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any study has been undertaken by the State Employment Service to assess the Engineering personnel required during the Fourth Plan period; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) A copy of the report has been placed in the Legislature Library.

திரு. வை. சங்கரன் : அதைப் பார்த்த பிறகு உப கேள்வி கேட்க சந்தர்ப்பம் இருக்காது. ஆகையால் இந்தக் கேள்வியை நாளைக்கு ஒத்தி வைக்க ஏற்பாடு செய்யலாமா ?

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் அவர்கள் இப்போதே அதைப் படிக்கலாமே ?

*382 கேள்வி—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) அங்கஹீனமானவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க சட்டமியற்றும் உத்தேசம் சர்க்கார் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) மத்திய அரசு அத்தகைய சட்டமியற்றுவதற்காக நமது ராஜ்யத்தின் கருத்து கோரியுள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) & (இ) இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அங்கஹீனமானவர்களுக்கு, குறிப்பாக கண் இழந்தவர்களுக்கு, கை கால் முடமானவர்களுக்கு விசேஷமான பயிற்சி எல்லாம் கூட பல இடங்களில் கொடுக்கப்பட்டு வருகிறது. அத்தகைய பயிற்சி பெற்ற அங்கஹீனமானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசாங்கம் விசேஷமாக என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்று அறியலாமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The need to provide special facilities in rendering employment assistance to the physically handicapped has been widely recognised and a Special